# அக்டோபர் – 20 – சனி

## புனித மரிய பெர்தில்லா போஸ்கார்தின்

## ஆவியார் அந்நேரத்தில் உங்களுக்குக் கற்றுத் தருவார்” லூக் 12:12

### முதல் வாசகம் : ஏபேசியர் 1 : 15 – 23

சகோதர சகோதரிகளே!ஆகவே, ஆண்டவராகிய இயேசுவின்மீது நீங்கள் கொண்டுள்ள நம்பிக்கை பற்றியும் இறைமக்கள் அனைவரிடமும் நீங்கள் செலுத்தும் அன்பு பற்றியும் கேள்வியுற்று, நான் இறைவனிடம் வேண்டும்போது உங்களை நினைவுகூர்ந்து உங்களுக்காக நன்றிசெலுத்தத் தவறுவதில்லை. நம் ஆண்டவராகிய இயேசுக் ¨றிஸ்துவின் கடவுளும் மாட்சி மிகு தந்தையுமானவர் அவரை முழுமையாக நீங்கள் அறிந்துகொள்ளுமாறு ஞானமும், வெளிப்பாடும் தரும் தூய ஆவியை உங்களுக்கு அருள்வராாக! கடவுளுடைய அழைப்பு உங்களுக்கு எத்தகைய எதிர்நோக்கைத் தந்துள்ளது என்றும், இறைமக்களுக்கு அவர் அளிக்கும் உரிமைப்பேறு எத்துணை மாட்சிமிக்கது என்றும், அவர்மீது நம்பிக்கை கொள்பவர்களாகிய நம்மிடம் செயலாற்றுகிற அவரது வல்லமை எத்துணை ஒப்புயர்வு அற்றது, மேலானது என்றும் நீங்கள் அறியுமாறு உங்கள் அகக்கண்கள் ஒளியூட்டப் பெறுவனவாக! கடவுள் வலிமைமிக்க தம் ஆற்றலை, கிறிஸ்துவிடம் செயல்படுத்தி, இறந்த அவரை உயிர்த்தெழச் செய்து, விண்ணுலகில் தமது வலப்பக்கத்தில் அமர்ந்தினார். அதன் மூலம் ஆட்சியாளர், அதிகாரம் கொண்டோர், வல்லமை உடையோர், தலைமை தாங்குவோர் ஆகிய அனைவருக்கும் மேலாகவும் அவரை உயர்த்தினார் இவ்வுலகில் மட்டும் அல்ல. வரும் உலகிலும் வேறு எப்பெயர் கொண்டோருக்கும் மேலாகவும் அவரை உயர்த்தினார். அனைவரையும் கிறிஸ்துவுக்கு அடிபணியச்செய்து, அனைத்துக்கும் மேலாக, அவரைத் திருச்சபைக்குத் தலையாகத் தந்தருளினார். திருச்சபையே அவரது உடல். எங்கும் எல்லாவற்றையும் நிரப்புகின்ற அவரால் அது நிறைவு பெறுகின்றது.

**பதில்பாடல் :** உமது கை படைத்தவற்றை அவர்கள் ஆளும்படி செய்துள்ளீர்.

### நற்செய்தி : லூக்கா 12 : 8 - 12

அக்காலத்தில் இயேசு தம் சீடர்களுக்குக் கூறியது : “நான் உங்களுக்குச் சொல்கிறேன்: மக்கள் முன்னிலையில் என்னை ஏற்றுக் கொள்பவரை மானிடமகனும் கடவுளின் தூதர் முன்னிலையில் ஏற்றுக்கொள்வார். மக்கள் முன்னிலையில் என்னை மறுதலிப்பவர் கடவுளின் தூதர் முன்னிலையிலும் மறுதலிக்கப்படுவார். மானிடமகனுக்கு எதிராய் ஏதாவது ஒரு வார்த்தை சொல்லிவிட்டவரும் மன்னிக்கப்படுவார். ஆனால் தூய ஆவியாரைப் பழித்துரைப்பவர் மன்னிப்புப் பெறமாட்டார். தொழுகைக் கூடங்களுக்கும் ஆட்சியாளர், அதிகாரிகள் முன்னும் உங்களைக் கூட்டிக்கொண்டு போகும்போது எப்படிப் பதிலளிப்பது, என்ன பதில் அளிப்பது, என்ன பேசுவது என நீங்கள் கவலைப்பட வேண்டாம். ஏனெனில் நீங்கள் பேசவேண்டியவற்றைத் தூய ஆவியார் அந்நேரத்தில் உங்களுக்குக் கற்றுத்தருவார்.” என்றார்.

**தியானம்:** தூய ஆவியானவர் எவ்வாறு எமது வாழ்வில் செயற்படுகின்றார் என்றும், அவர் எவ்வாறு எம்மை வழி நடத்துகின்றார் என்றும் இன்றைய வாசகங்கள் நமக்கு விளக்கிக் கூறுகின்றன. ஒரு பேனாவை எழுதும்போது அதில் நிரம்பியுள்ள மையின் நிறத்தைப் பொறுத்தே எழுத்தின் நிறமும் இருக்கும். அது கறுப்பு, நீலம், சிவப்பு என்று பல நிறங்களைப் பெறுவதற்கு அதன் மைதான் காரணம். மையானது தன்னை மறைத்துக் கொண்டுள்ளது. நாம் எழுதும்போது அது தனது நிறத்தை வெளிப்படுத்துகின்றது. இவ்வாறுதான் ஆவியானவரும் நமக்குள் மறைந்திருக்கின்றார். அவர் நம்மை கடவுளின் விருப்பத்திற்கேற்ப நடத்தி செல்கின்றார். அவரை நாம் பயன்படுத்தாமல் மூடி வைப்போமேயானால் பாவியாத பேனாவில் எவ்வாறு மை பழுதடைந்து பயன் அற்றதாகப் போகிறதோ அதுபோல் எம் வாழ்வும் பயன் அற்றுப் போய்விடும். எனவே நம் எமது வாழ்வை மிகக் கவனமாக கொண்டு நடத்த வேண்டிய்வர்களாக இருக்கின்றோம். அதனால்தான் யேசு நற்செய்தியில் ஆவியானவருக்கு எதிராக செய்யப் படும் பாவம் மன்னிக்கப் பட மாட்டாது என்கின்றார். ஆதியில் உலகம் தோன்றுமுன் கடவுளின் ஆவியானவர் தண்ணீரின்மீது அசைவாடினார். அதே ஆவியானவர் மரியாவின்மேல் நிழலிட்டார். திருச்சபையின் வளர்ச்சியில் தூய ஆவியானவரின் பங்களிப்பு நிறையவே உண்டு. யேசு இவ்வுலகை விட்டு பிரிந்தபின் சீடர்கள் பயந்து தம்மை மூடிய கதவுகளுக்குள் மறைத்துக்கொண்டபோது ஆவியானர் அவர்களை ஆட்கொண்டார். பூட்டிய கதவுகள் திறந்தன. கட்டிய சங்கிலிகள் அறுந்தன. புதுப்பலனும், புத்துணர்ச்சியும் பெற்ற சீடர் உலகெங்கும் சென்று படைபிற்கெல்லாம் நற்செய்தியை அறிவித்தார்கள். நாமும் ஆவியானர் எம் வாழ்வில் செயற்பட இடம் கொடுப்போம். அவர் நம்மை நேரிய பாதையில் வழி நடத்துவார்.